**தலைப்பு 282 – நீர்ப்பாசனத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப் பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 3,115,635,495 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அப்பெறுமதி ரூபா 4,805,224,866 ஆக இருந்தமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 1,689,589,371 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகிறோம். | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பண செலவிடல்களின் பெறுமதி சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் செலவினத்தின் கீழ் பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீட்டு கைப்பற்றல்கள் ரூபா 8,450,855,107 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் திறைசேரி குறிப்பின் பிரகாரம் ரூபா 6,761,265,736 ஆனமையால் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 1,689,589,371 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகிறோம். | முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சலை சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியின் போது திணைக்களத்தின் வலய பணிப்பாளர் அலுவலகம் மற்றும் பிரதேச பொறியியலாளர் அலுவலகங்களில் காணிகள் 4,735 ஏக்கர் 123 பேச் மற்றும் பண்டாரவல, காலி, கண்டி, பொலன்னறுவை, மொனராகலை, அம்பாந்தோட்டை நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்கள் அமைந்துள்ள 392 கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குவதுடன், உரிய சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு முன்னர் முறையான பிரகாரம் மதிப்பீடு செய்யவேண்டி இருந்தமையால் அதற்காக 2020 யூலை 28 மற்றும் 2020 செப்டெம்பர் 18 ஆம் திகதிய கடிதம் மூலம் உரிய சொத்துக்களை மதிப்பீடு செய்து தருமாறு மதிப்பீட்டு திணைகக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | திணைக்களத்திற்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.6.3 கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுநிதி சீராக்கல் கணக்கில் முற்பணம் ''பீ'' கணக்கின் சீராக்கம் ரூபா 1,061,226 தொகை வைப்புக் கணக்கில் ரூபா 949 மற்றும் முன்னைய ஆண்டின் பண செலவிடல்கள் ரூபா 2,144,247, என்பன சீராக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி சீராக்கல் கணக்கில் முற்பணம் ''பீ'' கணக்கின் கீழ் சகல சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வைப்புக் கணக்கின் ரூபா 949 மீதி வைப்புக் கணக்கில் சீராக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுகளின் பண செலவிடல்களான ரூபா 2,145,193 தொகை கட்டுநிதி கணக்கின் கீழ் சீராக்கப்பட்டுள்ளது. | கட்டுநிதி சீராக்கல் கணக்கில் காண்பிக்கப்பட வேண்டிய மீதியை சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **இழப்பு மற்றும் நட்டப்பதிவேடு**<br>நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் 2009 முதல் 2020 ஆம் ஆண்டு வரை ஏற்பட்டிருந்த ரூபா 2,184,031 பெறுமதியான 07 இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் அப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிய தருகின்றோம். | இழப்பு மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திணைக்களம் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக திறைசேரியிலிருந்து கோருவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மொத்த கட்டுநிதி தேவை ரூபா 19,555,662,298 ஆகும். முன்னைய ஆண்டின் பொறுப்புக்களையும் உள்ளடக்கி மீளாய்வாண்டின் செலவினங்களுக்காக ரூபா 35,238,831,421 தொகை திணைக்களத்தால் திறைசேரியிருந்து கோரப்பட்டிருந்த போதும் கிடைத்த மொத்த நிதியேற்பாடு ரூபா 14,093,489,206 ஆக இருந்தது. அந்த பெறுவனவுகள் கட்டுநிதி கோரப்பட்ட கட்டுநிதியில் 35.51 சதவீதமாக இருந்தது. அதனால் கட்டுநிதி திட்டம் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | உரிய மாதத்திற்கு முன்னருள்ள மாதம் வரையான பொறுப்புக்களுக்காக கிடைக்கப்பெறாத கட்டுநிதியை உள்ளடக்கி அவ்வப்போது திறைசேரியிலிருந்து மாதாந்தம் விண்ணப்பிக்கப்பட்ட கட்டுநிதி தொகையின் கூட்டுமொத்தம் ரூபா 35,238,831,421 ஆகும். வருடாந்த பாதீட்டின் மூலம் நீர்ப்பாசன திணைக்களத்தினதும், ஏனைய திணைக்களங்களின் கீழும் ஒதுக்கப்பட்ட மொத்த பாதீட்டு நிதிஏற்பாடு ரூபா 19,555,662,298 ஆக இருந்ததுடன் அந்த தொகையில் ரூபா 14,093,489,206 தொகை திறைசேரியினால் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கட்டுநிதி அவ்வப்போது திறைசேரியிலிருந்து கோரப்பட்ட கட்டுநிதியில் குறைவான சதவீதமொன்றாக இருந்த போதும் அது மொத்த நிதிஏற்பாட்டுத் தொகையில் 72 சதவீதம் ஆகும். | எதிர்வரும் வருடத்தின் போது நிறைவேற்றுவதற்கு நிர்ணயித்த பணிகளை சரியான பிரகாரம் இணங்கண்டு கட்டுநிதி கோரப்பட வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மதிப்பீடு தயாரிக்கும் போது தேவையினை இனங்காணாமல் ஒதுக்கீடுகள் மேற்கொண்டமை மற்றும் திட்டமிடப்பட்ட பிரகாரம் வேலை நடவடிக்கைகள் செய்யாமை போன்ற காரணங்களால் ரூபா 11,640,560,000 தொகையான தேறிய ஒதுக்கீடுகளில் ரூபா 44,356,717 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | அவ்வப்போது பயணத் தடை விதிக்கப்பட்டமையால் அலுவலக நடவடிக்கைகளை நாளாந்தம் மேற்கொள்ள முடியாமை, கொரோனா தொற்றுநோய் காரணமாக கூட்டங்களை நடாத்துதல் zoom முறை ஊடாக நடாத்தியதால் உபசரிசரிப்புச் செலவினங்கள் குறைவடைந்தமை மற்றும் னேைய செலவினங்கள் குறைவடைந்தமையினால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | பாதீட்டைத் தயாரிக்கும் போது இயலுமானவரை முரண்களைக் குறைக்கக்கூடிய வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு உள்ளதாயின் மாத்திரம் திணைக்களத்தால் வேலையொன்று அல்லது சேவையொன்று அல்லது வழங்லுக்காக ஏதோஒரு செலவினத்தை செயவதற்கு அல்லது கட்டுப்படுவதற்கு அல்லது ஏற்படுத்திக்கொள்ள | நிதிக் கூற்று அறிக்கையின் 94(1) கீழ் பொறுப்புக்களாக ரூபா 247,836,264 காண்பிக்கப்பட்டிருந்தது. பொறுப்புக்களாக பிரதேச நீர்ப்பாசன அலுவலகங்களின் அத்தியவசிய செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு செலவினங்களே காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டின் இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட 4 கணக்குகளின் கீழ் நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் | நிதிப்பிரமாணம் 94(3) இல் பிற்போட்ட பொறுப்புக்களிற்கு உடன்படும் போது நிதிப்பிரமாணம் 447(5) இன் பிரகாரம் கணக்குகள் மற்றும் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியுமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 1,028,428,600 தொகையான கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. | அந்தந்த கணக்குகளின் கால எல்லையின் இறுதியின் போது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு நீக்கப்பட்டு இருந்த போதிலும் அதுவரையிலும் மேற்கொள்ளப்பட்ட பொறுப்புக்களை நீக்கக் கூடிய இயலுமை காணப்படவில்லை. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான இடைக்கால அங்கீகரித்தல் கணக்கின் மூலம் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு கணக்குகளில் பொறுப்புக்களைத் தீர்த்து வைக்க போதியளவானதாக இன்மையால் பொறுப்பாக ஒதுக்கீட்டு கணக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிதியாண்டிற்கான கொடுப்பனவுகள் அந்த நிதியாண்டில் விடுவிக்க இருந்ததுடன் எந்த மறுப்பும் அடுத்து வரும் மாதத்தில் தீர்த்து வைக்கும் நோக்குடன் முன் கொண்டு செல்லலாம்.அந்த ஆலொசணைகளிற்கு முரணாக ஏற்படுத்தப்பட்ட பொறுப்புக்களை திறை சேரி தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்காது இருந்தமையும் ஆலொசணை வழங்கி இருக்கையில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி நிதி அறிக்கையில் ரூபா 1,324,545,470 தொகை அவதானிக்கப்பட்டுத.இதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் சேமிப்புக்களை விஞ்சி ரூபா 1,280,188,753 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. | நிதிப்பிரமாண இலக்கம் 94(3) இன் கீழ் பொறுப்புக்களுக்கு உடன்படுவதற்கு திணைக்களத்தின் தலைவருக்கு அதிகார பலம் உரித்தாக இருந்தது. அதன் பிரகாரம் 2 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 3 திட்டங்கள் (பாரியளவான செயற்திட்டம்) மற்றும் 4 செயற்திட்டங்களின் (நடுத்தர செயற்திட்டம்) பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 1,072,785,314 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. 3 செயற்திட்டங்கள் மற்றும் 4 செயற்திட்டங்களின் நிதிஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 4,451,289 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இற்கு இணங்கும் வகையில் பொறுப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) சுற்றிக்கை ஆலோசனையின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் அளவு அரச கணக்குகள் திணைக்களத்தினால் பேணப்பட்ட தகவல் முறைமை நாள் தோறும் நாளதுவரையாக்குவதற்காக ஒவ்வொரு செலவின அலகுகள் தொடர்பாகவும் ஏற்படுத்தப்பட்ட கடப்பாட்டு பொறுப்புக்கள் மற்றும் அந்த பொறுப்புக்களை விடுவித்தல் தொடர்பான தகவல்கள் இணைய தளத்தில் தரவிக்கம் (Up lord) செய்ய வேண்டியிருந்தமை ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த தகவல்கள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | சிகாஸ் கணக்கீட்டு முறைமையில் அதற்காக போதியளவான பிரகாரம் நிதி ஏற்பாடு காணப்படுமாயின் மாத்திரமே பொறுப்புக்களை உள்ளடக்க முடியும். எனினும் மேற்கூறப்பட்ட விளக்கங்களின் பிரகாரம் உரிய பொறுப்புக்களுக்கு நிதிஏற்பாடு இன்றிய போதிலும், உள்ளடக்கப்பட்டிருந்தது. அதனால் சிகாஸ் கணக்கீட்டு முறைமையை நாளதுவரையாக்குதலும் செய்யமுடியாதிருந்ததுடன், இது தொடர்பாக திறைசேரியின் கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திடம் கலந்துரையாடப்பட்டதையும் தயவுடன் அறியத் தருகின்றோம். | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 255/20 இற்கு இணங்க பொறுப்புக்கள் தொடர்பாக அறிக்கையிடப்படல் வேண்டும். |

## 2.4 வைப்புக்கள்

----------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கேள்வி வைப்புக்கள், ஒப்பந்தங்கள் மற்றும் தற்காலிக நிறுத்தி வைத்தல் பணங்கள் போன்றவை பொது வைப்பு கணக்குகளில் 02 வருட காலத்தை விஞ்சிய தொகை ரூபா 387,626,301 ஆக இருந்ததுடன் நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் | கேள்வி வைப்புக்கள், ஒப்பந்தம் மற்றும் தற்காலிக நிறுத்தி வைத்தல் பணங்கள் போன்வை பொது வைப்பு கணக்குகளில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளாவாறு 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் 387,626,301 ஆக இருந்ததுடன் அந்த | வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வைப்பு நிதியில் 05 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 2,425,275 ஆக இருந்தது. | வைப்புகளில் 2021 மே 20 ஆம் திகதி வரையில் 239,329,138 தொகை உரிய தரப்பினருக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன் எஞ்சிய மீதி ரூபா 148,297,163 இன்னும் செயற்படுத்தப்பட்டு காணப்படுகின்ற பணிகளுக்கு உரிய வைப்புகள் ஆகும். மேலும் 05 வருடங்களை விஞ்சிய வைப்புகளின் தற்போதைய மீதி ரூபா 1,937,078 ஆகும். அதற்குரிய வைப்பு கணக்குகள் வகையின் பிரகாரம் பகுப்பாய்வு மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. | |

**2.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை | இந்த திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறையை ஆக்கப்பூர்வமாக நடத்திச் செல்லும் நோக்கில் திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் பங்குபற்றல் ஒவ்வொரு வாரமும் திங்கள் எமது தலைமையில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் செயற்பாடு நிலைமை மீளாய்வு செய்வதற்காக கூட்டப்படுவதுடன், அதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டு முதல் உரிய | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அலுவலகங்களுக்கு சென்று பிரதான அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் அலுவலகத்தை மேற்பார்வை செய்யும் வேலைத்திட்டமும் அமுல்படுத்தப்படுகின்றது. |

**2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) XIX அத்தியாயத்தின் 3.3 ஆம் பிரிவு. | சகல விடுதிகளும் அவற்றை பெறுவதற்கு தகைமை உள்ள உத்தியோகத்தர் வகுப்புக்களின் பிரகாரம் தரமிடப்பட வேண்டியிருந்த போதும் கொழும்பு நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற இரத்மலானை ஜாவத்தை வீதியிலும், நாகலம் வீதியிலும் அமைந்துள்ள 12 உத்தியோகபூர்வ இல்லங்களை ஒதுக்கி உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை. | வெள்ளவத்தை சாந்த பீற்றர் பிரதேசத்தில் 10 உத்தியோகபூர்வ இல்லங்கள் சேவைத் தேவையின் அடிப்படையில் அந்த சகல உத்தியோகபூர்வ இல்லங்களும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாகலம் வீதியில் உள்ள உதியோக பூர்வ இல்லம் வெள்ள கடமைகளில் ஈடுபடும் பதவியணியினரால் பயன்படுத்தப்படுகின்றது. | உத்தியோகபூர்வ இல்லங்களை தரப்படுத்தப்பட்டு தகுதியான உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | XIX அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவு. | திணைக்களத்துக்குச் சொந்தமான ஏனைய நபர்களினால் கைப்பற்றப்பட்டுள்ள 11 உத்தியோகபூர்வ இல்லங்களில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கைளை அகற்றி அந்த இலல்ங்களின் உரித்து மீளப் பெறப்பட்டிருக்க வில்லை. | 16 உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக தற்போதைய செயல் முன்னேற்றம் காண்பிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்ற அனுபதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி அவற்றின் உரித்து திணைக்களத்திற்கு கையேற்கப்பட வேண்டும். |
| (iii) | XXIV அத்தியாயத்தின் 4.4 மற்றும் 4.5 ஆம் பிரிவுகள் | வழங்கப்பட்ட கடன் முழுமையாக அறவிடுவதற்கு முன்னர் உத்தியோகத்தர் மரணமடைந்தால் அவரிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிக் காணப்படுகின்ற சகல கடன் பணமும் அவரின் உரிமையாளருக்கு செலுத்துவதற்கு காணப்படுகின்ற ஏதாவது தொகையிலிருந்து அறவிடுமாறு ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திடம் உடனடியாக கோர வேண்டி இருந்த போதிலும் ரூபா 1,751,988 நிலுவைக் கடன் தொகை மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. ஓய்வுபெற்றுச் சென்ற 196 ஊழியர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 20,798,439 தொகையான கடன் மீதி அறவிட வேண்டி இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் வேலை நீக்கத்துக்கு உள்ளான உத்தியோகத்தர்களிடம் இருந்தும், சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்தும் மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்தும் அறவிட வேண்டிய | மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதியான 1,751,988 தொகையில் 2021 ஏப்ரல் 30 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 212,251 தொகை அறவிடப்பட்டிருந்தது. மிகுதித் தொகையான ரூபா 1,539,737 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்டுகின்றது. ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து 2020 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டிய கடன் மீதியான ரூபா 20,798,439 தொகையில் தற்போது ரூபா 6,397,581 தொகை அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய 14,400,858 தொகையை அற விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. வேலை நீக்கத்துக்கு உட்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்தும், சேவையை விட்டுச்சென்ற | அறவிடவேண்டிய கடன் மீதியை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 3,308,119 கடன் தொகையை உரிய பிணையாளர்களிடம் இருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களிடம் இருந்தும் மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்தும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 3,308,119 தொகையில் இதுவரையில் ரூபா 16,500 தொகை அறவிடப்பட்டுள்ளது. மிகுதித் தொகையான ரூபா 3,291,619 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104 முதல் 110 வரை | 1979 முதல் 2012 வரையிலான காலத்தில் ஏற்பட்ட ரூபா 16,167,751 தொகையான 34 இழப்புகள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள், இழப்புகள் பதிவேட்டில் ஓய்வூதியத்தில் இருந்து அறவிடப்படுகின்ற நட்ட இழப்புகள், சம்பளத்திலிருந்து/ ஓய்வூதியத்தில் இருந்து அறவிடப்படுகின்ற நட்ட இழப்புகள், மற்றும் பதிவேட்டில் இருந்து அகற்றப் படவேண்டிய கோவைகள் என்பவையே எஞ்சி இருந்தது என்பதை அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 136, 137, 138, 139 | திணைக்களத்தின் நிதி அதிகாரங்களை கையளித்தல் உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு பதவிகளின் பிரகாரம் அதிகாரம் வழங்க முடியுமான அங்கீகரிக்க கூடிய, | அதற்குரிய சுற்றறிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டுக்காக | நிதிப் பிரமாணத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறுதிபடுத்தக் கூடிய மற்றும் செலுத்தக்கூடிய நிதி எல்லை உறுதியாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. கட்டுப்பாடு தொடர்பான அதிகாரங்களை கையளிக்கும் போதும் நிதிப் பிரமாணம் 135 மூலம் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை நியதிகள் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்பட்ட சுற்றறிக்கை ஒன்று விநியோகிக்கப்படும். | வேண்டும். |
| (இ) | திறைசேரி சுற்றறிக்கை 05/2015 | பாவனையில் இருந்து அகற்றப்பட்ட பெறுமதி காண்பிக்கப்படாத வாகனங்கள் மற்றும் 147 இயந்திர உபகரணங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சகல அலுவலகங்களுக்கும் உரியதாக பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொண்டு பொருள் மெய்மையாய்வு சபையினால் வழங்கப்படுகின்ற பரிந்துரையின் பிரகாரம் பொருள் (வாகனம் மற்றும் இயந்திரம் அல்லாத) விற்றுத்தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. எந்த ஒரு வருடத்திலும் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பாவனையிலிருந்து அகற்றப்டுகின்ற விடயங்களுக்கு பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்வரும் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு சபைக்கு சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. பாவனையில் இருந்து அகற்றப்படும் வாகனங்கள் மற்றும் இயந்திர பொறிமுறைகளை விற்றுத் தீர்ப்பதற்காக சந்தர்ப்ப | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சூழ்நிலைக்கேற்ப அவ்வப்போது குழு நியமிக்கப்பட்டு விற்றுத்தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தற்போது பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் இயந்திர பொறிமுறைகளை இனம் காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் குழு நியமிக்கப்பட்டுள்ளது. உரிய அறிக்கை கிடைத்ததன் பின்னர் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 23/94 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | 45 வருடங்களை விஞ்சியிருக்கும் போது நியமனம் வழங்குதல் முறையான நியமனமாக இல்லாதிருந்தமை மற்றும் ஓய்வூதியம் உரித்தற்றதாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதும் திணைக்களத்தில் 45 வருடங்களை விஞ்சிய 302 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | அரச நிர்வாக அமைச்சினால் அவ்வப்போது தற்காலிக, அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் இந்த ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் கையளிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (உ) | 2015 யூலை 23 ஆம் திகதிய 07/2015 ஆம் இலக்க ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | நாளாந்த கொடுப்பனவுகள் அல்லது மாதாந்த சம்பளம் உரித்தற்ற அரசாங்க சேவையில் இருக்கின்ற ஊழியர்களினால் அரசாங்க ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் பெறவேண்டியிருந்த போதும் திணைக்களத்தில் 302 அமைய ஊழியர்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க இல்லை. | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனுபவத்தின் பிரகாரம் கூலி அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்கு அந்த நாளாந்த சேவை காலத்துக்குரிய அரசாங்க ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்துவத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | -மேற்படி- |

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பஹா நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டின் போது வெலிக்கடை செயற்திட்டத்தில் இடதுபக்க கால்வாய் சுத்தப்படுத்துவதற்காக வடக்கு நிவன்தம விவசாய சங்கத்திற்கு ரூபா 149,100 தொகையில் கையளிக்கப்பட்டிருந்தது ஒப்பந்தம் விவசாய சங்கத்தின் பெயரில் உதவி பொறியியலாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவரினால் அதன் மேற்பார்வை, ரூபா 134,873 தொகை பெற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடிருந்தமை 2020 செப்டம்பர் 17 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த உதவி பொறியியலாளர் தொடர்பான ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் குழுவின் அறிக்கையின் பரிந்துரையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய விசாரணை நடவடிக்கைகள் மற்றும் மிகுதி நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.8 வங்கி கணக்கு செயற்பாடுகள்

--------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நீர்ப்பாசன திணைக்களத்தின் பிரதான அலுவலகம், 14 பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்கள் மற்றும் 06 செயற்திட்ட அலுவலகங்கள் என்பவற்றினால் பேணப்பட்டிருந்த 94 நடைமுறை கணக்குகளுக்கிடையே 21 கணக்குகளின் காசோலையில் கையொப்பம் இடுதல் மற்றும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்காக | வலய அலுவலகங்களின் கணக்காளர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றமையினாலும், பிரசவ விடுமுறையை பெற்றுச் சென்றமையினாலும், அதற்காக பதிற் கடமைக்கு ஏனைய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டமை போன்ற காரணத்தினால் | முறைமை மீளாய்வின்போது அறிக்கையிடல் முறைமை தீர்மானிக்கப்பட்டு பொறுப்புக்கள் கையளிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கணக்காளர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறு மேற்கொள்ளப் பட்டிருந்தது. கணக்காளர்களின் கையொப்பத்தை உள்ளடக்கிய கையொப்ப அட்டை வங்கிக்கு சமர்ப்பித்தல் தற்போது நிறைவேற்றப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 3,999,000 தொகையான நாச்சியாதீவு குள ஒதுக்கப் பிரதேசத்தில் நீர்ப்பாசன நூதனசாலை மற்றும் பயிற்சி நிறுவன கட்டிடம் நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு ரூபா 30,811,025 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் ஆரம்ப திட்டம் உள்ளுராட்சி நிறுவனத்தில் இருந்து அங்கீகாரித்துக் கொள்ளப்படாதிருந்ததுடன் கட்டிட நிர்மாணத்தின் போது ஆரம்ப திட்டத்திற்கு புறம்பாக உத்தியோகத்தர்களின் விருப்பத்தின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நாச்சியாதீவு குள ஒதுக்கப் பிரதேசத்தில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்காக தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள சகல துணைப் பாகங்களுக்கும் உரியதான மதிப்பீடு மற்றும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்காக குறித்த அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கொள்வனவு செய்யப்பட்ட மூலப் பொருட்கள் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. | மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் நிர்மாணங்களை ஆரம்பிக்க வேண்டியிருந்ததுடன் சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் 02 மேலதிக கிரய மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறாமை மற்றும் நிதிஏற்பாடு இன்மை போன்றவற்றின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த நிர்மாணத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,962,121 பெறுமதியான மூலப் பொருட்கள் மற்றும் பொருத்திகள் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்படாமையினால் அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது. | | |
| (ஆ) | யான் ஓயா நீர் தேக்க திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக 2013 மே 31 ஆம் திகதிய அமப/13/0721/508/007 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஒவ்வொரு பணிக்காகவும் ஒதுக்கப்பட்ட ரூபா 36,855 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 33,424 மில்லியன் செலவிடப்பட்டிருந்து. அதன் போது அமைச்சரவை அங்கீகாரம் இன்றி ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையினை விஞ்சி செலவினம் செய்யப்பட்டிருந்தது. அதனிடையே சில பணிகள் பெறுகை எல்லையினை விஞ்சி 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன், சில இலக்குகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.<br><br>கீழ் பூர்த்தி அளவிடல் | யான் ஓயா இடது கரை வாய்க்காலின் ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் இடைநடுவே நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட இடத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய வயல் வெளியொன்று மற்றும் அதற்கு மேல் பதவிய ஒதுக்கக் காடுகள் அமைந்திருந்தது. இதன் இடையே நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதால் 400 ஏக்கர் அளவிலான பிரதேசம் நீரில் மூழ்குவதுடன், அதன் மூலம் உரிய வயல் வெளிகள் நீரினால் மூழ்கிச் செல்லும். எனினும் இதனிடையேயுள்ள நீர்த்தேக்கத்தின் மூலம் பயிர்ச்செய்கை நிலத்திற்காக நேரடியாக நீரை வழங்க முடியாதிருந்தமையும், நீரில் தாழ்கின்ற 400 ஏக்கர் அளவிலான பிரதேசத்தின் பயிரச்செய்கை நிலத்திற்காக மீண்டும் மாற்று | ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள், இடது கரை கால்வாய் நிர்மாணிக்கும் காணி கையேற்றல் மற்றும் மீள் குடியமர்த்துதல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை விஞ்சி முறையே ரூபா 6.8 மில்லின், ரூபா 3,623 மில்லியன் மற்றும் ரூபா 2,215 மில்லியன் தொகைகள் செலவிடப்பட்டிருந்தன.<br><br>யான் ஓய இடது கரை கால்வாய் நிமாமாணத்திற்காக 2017 திசெம்பர் 12 ஆந் திகதி நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 39.5 மில்லியன் தொகையான ஒப்பந்த உடன்படிக்கையின் கீழான அளவிடைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பணிகள் ஆரம்பத் திட்டத்தின் மாற்றத்தின் காரணமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | காணியொன்றை வழங்குவதற்கான இடமொன்று காணப்படாமையினாலும், மாற்று காணி வழங்கும் வகையில் பதவிய மற்றும் கெப்பிட்டிகொல்லாவ பிரதேச செயலக பிரிவுகளில் ஒதுக்கப் பிரதேசம் அல்லாத காணி வரையறுக்கப்பட்டிருந்தமை போன்ற காரணங்களை கருத்திற்கொண்டு இந்த இடைநடுவே நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக யான் ஓய இடது கரை கால்வாய்க்குரிய பிரதேசம் ஊடாக திறந்த கொங்கிரீட் கால்வாய் நிர்மாணிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| (இ) | தெற்கு கரைக்கு உரியதாக நிர்மாணிக்கும் உள்நுழைவு வீதி மற்றும் பால நிர்மாணம், காணப்படுகின்ற நீர்ப்பாசன முறைமைகளை புனரமைத்தல் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக ரூபா 4,530 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும், அதன் நடவடிக்கைகளுக்காக ரூபா 1,270 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் கீழ் திட்டமிடப்பட்ட ரூபா 3,260 மில்லியன் வேலைக்காக ஒதுக்கப்பட்ட நிதி அங்கீகாரம் இன்றி ஏனைய பணிகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | யான் ஓயா செயற்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை திருத்துவதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிப்பதற்காக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் குழுவொன்று நியமிக்கப்பட்டு குழுவின் பரிந்துரையுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் நிர்மாண நடடிவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயல்முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர்வடிகாலமைப்பு சபையின் கீழ் அமுலாக்கப்பட்ட கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொட ஒன்றிணைந்த நீர்வழங்கல் செயற்திட்டத்திற்கான தேவையான நிதிஏற்பாடாக ரூபா 3,800 மில்லியன் பஸ்னாகொட நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் 2016 மார்ச் 21 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தபோதும் செயற்திட்ட நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 560 மில்லியன் செலவிடப்பட்டு செயற்திட்டத்தின் குழாய்களை பதித்தல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் 33 வீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதின் தாமதம் காரணமாக எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு 2021 ஏப்ரல் வரையும் முடியாதிருந்தது. செயற்திட்டத்திற்கு 27 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 18 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். 2019 யூன் மாதம் நீர்த்தேக்கத்தின் நிர்மாண நடவடிக்கைகள் சீனக் கம்பனிக்கு கையளிக்கப்பட்ட போதிலும் பதவியணியினரின் தேவை தொடர்பாக மீளாய்வின்றி | செயற்திட்டத்திற்காக பதவியிணியினர் நியமித்தல் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நீர்தேக்கத்தின் நிர்வாக அலகினை தாபித்தல் உயர் மட்டத்தை அடையாளப்படுத்துதல், காணி கைப்பற்றுதல், சுற்றாடல் அங்கீகாரத்தைப் பெறும் நடவடிக்கைகள் நீர்த்தேக்கத்திற்காக அளவை நடவடிக்கைகள், றுவன்வெல்ல மற்றும் அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய நீர்த்தேக்கத்தில் தாழ்கின்ற பிரதேசங்களில் காணிகளை கைப்பற்றுதல், நீரில் மூழ்கின்ற வீதிகளை இனங்காணல் மற்றும் மாற்று வழிகளை இனங்காணல் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் பஸ்னாகொட நீர்த்தேக்க திட்டம், நிர்மாணம் மற்றும் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர்வடிகாலமைப்புச் சபைக்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று 2019 யூன் 12 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. பஸ்னாகொட நீர்த்தேக்கத்தின் பொறியியல், வழங்கல் மற்றும் நிர்மாணம் (EPC) ஒப்பந்த உடன்படிக்கையொன்று நீர்ப்பாசன அமைச்சின் | உடன்படிக்கையின் பிரகாரம் குறித்துரைத்த திகதிகளில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்ததுடன், பதவியணியினர் தொடர்பாக மீளாய்வு செய்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. | செயலாளருக்கும், Sinohydro Corporation Limited இற்கும் இடையே 2019 யூன் 13 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது.<br><br>அதன் பிரகாரம் அந்த காலப் பகுதியில் Sinohydro Corporation Limited கம்பனிக்காக புலனாய்வு நடவடிக்கைகள், திட்டமிடல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நீர்த்தேக்கத்தின் நிர்மாணம் இந்த வருடத்தின் இறுதியில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |

## 3.4 கால தாமதத்தின் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2017 திசெம்பர் மாதம் வேலை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட இரத்மலானை மத்திய இயந்திர வேலைத் தளத்தில் வாகன சேவை நிலையத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,065,600 தொகையான இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 7,431,464 பெறுமதியான வாகன சேவை கட்டிடத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2020 திசெம்பர் மாதத்தின் போதே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சொத்துக்கள் 03 வருட காலம் செயற்பாடற்று காணப்பட்டது. | இரத்மலானை மத்திய இயந்திர வேலை தளத்தின் சேவை நிலையமொன்று 2017 திசெம்பர் மாதம் வேலை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது வாகன சேவை கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், வருடாந்தம் கிடைக்கின்ற நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமையினால் சேவை நிலையமாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான ஏனைய வசதிகள் யாவும் பூர்த்தி | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை திட்டமிடப்பட்ட பிரகாரம் தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செய்வதற்கு 2020 பெப்ரவரி மாத்திலேயே முடியுமாக இருந்து. நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்தல் தாமதமாகியது. அதனால் அதனை ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் 2020 திசெம்பர் மாதத்தின் போது இடம்பெற்றிருந்தது. | |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரம்பேவ இயந்திர பொறியியலாளர் அலுவலக வளவில் பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய ஓட்ட நிலையில் காணப்படுகின்ற 03 லோடர்கள், கெட்டப்பிலர் இயந்திரம் மற்றும் வைப்ரேட்டர் என்பன எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பாரிய அளவிலான வேலைத் தளங்களில் ஈடுபடுத்தப்படுகின்ற 03 லோடர்கள், கெட்டப்பிலர் இயந்திரம் மற்றும் வைப்பிரேட்டர் முன்னர் அவ்வாறான வேலைத் தளம் காணப்படாமையின் காரணமாக ரம்பேவ இயந்திர வேலைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த இயந்திரம் கீழ் மல்வத்து ஓயா நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது. | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) ஹல்பாதொட்ட இயந்திர வேலைத்தளத்திற்கு பழுதுபார்க்காக 2020 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்டிருந்த 02 வாகனங்களை பழுது பாரத்து பயன்பாட்டிற்கு எடுக்கவோ அல்லது | ஹல்பாதொட்ட இயந்திர வேலைத்தளத்திற்கு 2020 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்டிருந்த அந்த இரண்டு வாகனங்களும் பல வருடங்களுக்கு மேற்பட்ட பழையதாகும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றை விற்கவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆதனால் அவை பழுதுபார்க்கக்கூடிய நிலயில் காணப்படவில்லை. காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் இடையே விற்றுத் தீர்ப்பதற்காக அனுப்புவதற்கு தாமதம் அடைந்திருந்ததுடன் தற்போது விற்று தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | தினைக்களத்திற்கு சொந்தமான பெறுமதி கணிப்பிட முடியாத 45 வாகனங்கள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக வெளித் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த வாகனங்களை திணைக்களத்திற்கு மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான சகல வாகனங்களும் 30 வருடங்களுக்கு மேல் பழையதாக இருந்தமையால் பெறுமதி மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவு நீர்பாசன திணைக்களத்திற்கு கீழேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனால் அந்த வாகனங்கள் (03 கார்கள், 17 ஜீப் வண்டிகள், 14 டபள் கப் வாகனங்கள்) நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. பின்னைய காலங்களில் அந்த பிரிவு நீர்ப்பாசன அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த வாகனங்களை கையேற்குமாறு நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசன திணைக்களமும் இலங்கை மஹாவலி அதிகார சபையும் ஒரு அமைச்சின் கீழ் | திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காணப்பட்ட காலத்தின் போது இந்த வானங்கள் இலங்கை மஹாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த வாகங்களையும் கையேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) திணைக்களத்திற்கு சொந்தமான 1552 உத்தியோகபூர்வ இல்லங்களில் 236 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படவில்லை. அதனிடையே 109 இல்லங்கள் பூரணமாக உடைந்த நிலையில் காணப்பட்டன. பழுதுபார்த்து குடியிருப்பதற்கு பொருத்தமான முறையில் கொண்டுவருவதற்கு முடியுமாக காணப்படுகின்ற 127 இல்லங்கள் காணப்பட்டன. ஆவற்றை பயன்படுத்தக் கூடிய நிலைக்கு கொண்டுவருவதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களின் தகவல்கள் 52 பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களில் இருந்து பெறவேண்டி இருந்தது. கொவிட் 19 தொற்றினால் தகவல்களை பெறுவதில் நடைமுறையில் பிரச்சினைகள் காணப்பட்டன. அலுவலக நடவடிக்கைகள் மீண்டும் சரியான நிலைக்குக் கொண்டுவந்து இரண்டு வாரங்களுக்குள் தகவல்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத் தருகின்றோம். | திணைக்களத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களை சரியான முகாமைத்துவத்துடன் பராமரித்தல் வேண்டும். |

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரம்பேவ வலய இயந்திர பொறியியலாளர் அலுவலகத்திற்கு பழுதுபார்த்தல் | வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக நிதிஏற்பாடு போதியளவான பிரகாரம் | பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்ட 37 வாகனங்களின் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் 01 வருடம் முதல் 06 வருட கால வீச்சில் வேலைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கிடைக்கப் பெறாதிருந்ததுடன், அதற்காக தேவையான பதவியணியினரும் போதியளவான பிரகாரம் காணப்படவில்லை. வாகனங்களை முன்னுரிமை அடிப்படையிலேயே பழுதுபார்க்கப்படுகின்றது. அவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது முன்னுரிமை காணப்படாத வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு அதிக காலம் எடுத்திருந்தது. | சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களில் ஏனைய வெளிநிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 41 உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 80 உத்தியோகபூர்வ இல்லங்களில் நடப்பாண்டில் 02 இல்லங்களில் மாத்திரமே வாடகை அறவிடப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி ரூபா 1,250,140 ஆகும். 78 இல்லங்களில் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களின் தகவல்கள் 52 பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களில் இருந்து பெறவேண்டியிருந்தது. கொவிட் 19 தொற்று நோயினால் தகவல்களை பெற்றுக்கொள்வதில் நடைமுறையில் பிரச்சினைகள் காணப்பட்டன. அலுவலக நடவடிக்கைகள் மீண்டும் சரியான நிலைக்கு கொண்டு வந்து இரண்டு வாரங்களுக்குள் தகவல்கள் அனுப்பி வைக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | திணைக்களத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து வாடகையை அறவிடல் சரியான பிரகாரம் முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |
| (இ) | வீரகெட்டிய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தில் சேவையாற்றிய உதவி நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவருக்கு 2003 ஆம் | சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து இந்த நட்டத்தை அறவிடுவதற்கு விசாரணைசெய்த போது கௌரவ | கட்டுநிதி கணக்கின் மீதியை தாமதம் இன்றி தீர்த்து வைத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டில் திணைக்களத்திற்குரிய வாகனம் ஒன்றை ஓடிச் செல்லும் போது ஏற்பட்ட வாகன விபத்தின் காரணமாக பரிக்கப்பட்ட தரப்பினருக்கு திணைக்கள வழங்கி கணக்கில் இருந்து ரூபா 3,708,100 இழப்பீட்டு தொகையாக செலுத்தப்பட்டிருந்தது. இழப்பின் முழு பொறுப்பையும் உத்தியோகத்தர் ஏற்க வேண்டியிருந்ததுடன், நட்டத்தை அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அந்த நட்டம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கட்டுநிதி கணக்கில் தீர்க்கப்படாத மீதியாக காணப்பட்டது. | நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக வழக்கு தொடர முடியாதிருந்ததாக வாய்மூலம் அறிவிக்கப்பட்டிருந்து. அதன் பிரகாரம் சம்பவத்திற்குரிய தரப்பினரான ஓய்வுபெற்றுச் சென்ற பொறியியலாளர் அவரின் ஓய்வூதிய சம்பளத்தில் இருந்து ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் இனக்கப்பாட்டின் அடிப்டையில் மாதாந்தம் ரூபா 10,000 வீதம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 4. மனித வள முகாமைத்துவம்

---

மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 7,112 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 5,391 ஆக காணப்பட்டன. அதன் பிரகாரம் வெற்றிடங்களின் எண்ணிக்கை 1,521 ஆகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 60 வருடங்களை நிறைவு செய்த மூன்று உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதனிடையே ஒப்பந்த அடிப்படையில் 2020 திசெம்பர் 15 ஆந் திகதி முதல் சேர்க்கப்பட்ட 64 வயதுடைய நிர்வாக உத்தியோகத்தர் நியமனத்திற்காக கணக்காய்வு திகதி வரையிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் | 6000 இற்கு அண்ணளவான ஊழியர் எண்ணிக்கையான ஆளணி சேவைகளின் கடமை நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றமையாலும் கடமைகளைச் செய்கின்ற போது அநேகமான கஸ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்ததாலும் அரச நிர்வாக அமைச்சின் வாய்மூல ஆலோசனையின் பிரகாரம் அரச | தேவையான பதவி வெற்றிடங்களை நிரப்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |

அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. நிறுவணத்தின் உயர் முகாமைத்துவ மட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 04 மேலதிக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயக பதவிகளுக்கிடையே 03 பதவிகள் பதிற்கடமை அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. நிறுவனத்தின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான மேற்பார்வைக்கு பொறுப்பாக இருக்கின்ற பிரதான நிதி உத்யோகத்தர் பதவி 2018 ஆம் ஆண்டு முதல் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தது.

நிறுவனங்கள் அனேகமானவற்றில் சேவையாற்றிய அனுபவமுள்ள ஓய்வுபெறற் நிர்வாக உத்தியோகத்தர் இருவரின் சேவை பெறப்பட்டிருந்தது. உரிய ஆவணங்கள் தற்போது அரச நிர்வாக அமைச்சின் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.எதிர்காலத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழவின் அங்கீகாரம் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலதிக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் பதவிக்காக முழு நேர பதிற்கடமைக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.பிரதான நிதி உத்யோகத்தர் பதவி அரசாங்க சேவை ஆணைக்குழவின் 2017 திசெம்பர் 27 ஆம் PSC/APP/05/03/23/2017 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நீர்ப்பாசன திணைக்களத்தில் வெற்றிடம் காணப்படுகின்ற இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தரத்தில் பிரதான நிதி உத்தியோகத்தர் பதவியில் 2018 சனவரி 01 ஆம் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி அல்லது வெற்றிடம் பூர்த்தி செய்யப்படுகின்ற தினம் அல்லது செல்கின்ற தினம் இந்த இரண்டில் முதலாவது வருகின்ற திகதி வரை முழு நேர பதிற்கடமையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பிரிவு உதவியாளர்களில் 63 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. அதற்காக 2020 பெப்ரவரி 03 ஆம் திகதி 59 பொறியியல் உதவி உத்யோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உரிய பதிற்கடமை வழங்குவதற்காக உத்யோகத்தர்களைத் தெரிவு செய்ய முறையான திட்டமுறைமையொன்று காணப்படவில்லை. பொறியியளாலர் உதவி சேவையில் II ஆம் தரத்தில் 23 உத்யோகத்தர்களும் III ஆம் தரத்தில் ஒரு உத்தியோகத்தரையும் நியமிப்பதற்கான நியதிகள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரிவுகளில் அத்தியவசிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக அந்த பதவியின் உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டிய தேவை இருந்தமையினால் முன்னைய பிரிவுகளில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கிடையே சிரேஸ்ட நிலை மற்றும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கிடையே பொறியியலாளர் உதவிச் சேவையில் நியமிக்கும் அதிகார தரப்பான நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் பிரிவு உதவியாளர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். கொவிட் 19 நிலைமைக்கிடையே சகல நடவடிக்கைகளும் நேர காலத்திற்கு மேற்கொள்ள வசதியற்று இருந்தமையால் எதிர்காலத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | தீவு முழுவதும் ஒன்றிணைந்த சேவைகளுக்குரிய 20 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 53 ஆக இருந்ததுடன், அதில் 29 பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டன. | தீவு முழுவதும் மற்றும் ஒன்றிணைந்த சேவைகளுக்குரிய பதவிகளுக்காக உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை 92 இல் அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அந்த வெற்றிடங்களை விரைவாக நிரப்புமாறு தற்போதும் அறிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | திணைக்களத்தின் பதவியணியினர் பிரதான அலுவலகம், வலய நீர்ப்பாசன அலுவலகம் மற்றும் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களுக்கு இடையே நியமிக்கப்பட்டுள்ள முறை தொடர்பாக சரியான திட்ட முறைமையொன்று காணப்படவில்லை. | திணைக்களத்தின் பதவியணியினர், பிரதான அலுவலகம் நீர்ப்பாசன அலுவலகம் மற்றும் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள வேலையின் அளவிற்கு ஈடுகொடுகின்ற வகையில் தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் ஒன்று காணப்பட்டது. | சேவை தேவையின் பிரகாரம் முறையாக ஊழியர்களை அலுவலகங்களுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |